மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 22 (05-04-1998) ஞாயிற்றுக்கிழமை UTHAYAN–A Lively National Tamil Daily கதிர்:110

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்: புலிகள் ஏற்க இன்னும் தயார்!

## வன்னியில் யாழ் ஆயரிடம் புலிகள் பிரமுகர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்கப் புலிகள் இன்னும் தயாராக உள்ளனர்.

வன்னியில் தம்மைச் சந்தித்த யாழ். ஆயரிடம் புலிகள் பிரமுகர்கள் இதனைத் தெரிவித்தனர்.

யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் வன்னியில் உள்ள மக்களின் நிலை குறித்து அறியவும்—

சமய அலுவல்களில் பங்குபற்றவும்— வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு கடந்த வாரம் விஜயம் மேற்கொண்டார்.

அங்கு விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அரசியல் துறையைச் சேர்ந்த விதுரன், சுதா ஆகியோரை அவர் சந்தித்தார்.

அப்பொழுதே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்க இன்னும் தயாராக இருப்பதாக புலிகள் பிரமுகர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது ''யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்களை அன்னியப் பிரதேச பிரஜைகள் போன்று ஆக்கிவிட்டீர்கள். அவர்கள் உங்கள் பகுதியில் உள்ள உறவினர்களுடன் தொடர்பு

(11ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் பிரச்சினை குறித்து கொழும்பில் மாநாடு

கொழும்பு, ஏப். 5

யாழ். குடாநாட்டில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டிக்கும், தமிழ்க் கட்சிகளுக்குமிடையிலான மாநாடு ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் புளொட் சார்பாக அதன் உபதலைவர் மாணிக்கதாசன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வை. பாலச்சந்திரன், ஈ. பி. ஆர். எல். எவ். சார்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.பி.டி.பி. சார்பாக தவராஜா, இராணுவத் தளபதி றோகான் தளுவத்த, மேஜர் ஜெனரல் பலகல்ல, வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரி ஒபடகே, பொலீஸ்மா அதிபர் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (இ7-8)

## புலிகளுடன் தொடர்பு வைக்க பத்திரிகையாளருக்கு அனுமதி

### விரைவில் சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஏப். 5

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகள் வைத்திருப்பதைத் தடை செய்யும் சட்டத்தின் கீழ் பத்திரிகையாளர்கள் மீது வழக்குத் தொடர்வதில் இருந்து விதிவிலக்கு அளிக்கும் வகையில் இச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ரோய்ட்டர் நிறுவனத்துக்கு இது பற்றித் தெரிவித்துள்ளார்.

''இச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலம் பத்திரிகையாளர்கள் விடுதலைப் புலிகளிடம் இருந்து 'பக்ஸ்' செய்திகளைப் பெறுதல், அவர்களுடன் பேசுதல் ஆகியவற்றுக்கு அனுமதியளிக்கப்படும்'' என்று லக்ஷ்மன் கதிர்காமர் கூறினார்.

தலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து இலங்கை விடுதலைப் புலிகளைத் தடை செய்தது. இந்தத் தடைக்கு அமைய எவரும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளுதல், அல்லது அவர்கள் சார்பில் பணம் அறவிடுதல் போன்றவற்றுக்கு 7 வருடத்துக்கும் 15 வருடங்களுக்கும் இடைப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

பத்திரிகையாளர்கள் கிரமமாக புலிகளின் லண்டன் அலுவலகத்தில் இருந்து பத்திரிகை அறிக்கைகளைப் பெற்று வருவதனால் இந்தத் தடை அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது, அதனால் இந்த நிலைமையைப் போக்கி பத்திரிகையாளர்கள் தொடர்ந்து சுதந்திரமாகச் செயற்படுவதை உறுதிப்படுத்த இந்த தடைச் சட்ட விதியில் திருத்தம் செய்யப்பட உள்ளது.

இப்படி லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டபகுதிகளில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் பல்வேறு அமைப்புக்களுக்கு இந்தத் தடையில் இருந்து ஏற்கனவே விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## தொலைபேசிச் சேவை நாளை முதல் சீராகும்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். குடாநாட்டில் சில பகுதிகளில் சீர் குலைந்துள்ள தொலைபேசிச் சேவைகளை திங்கட்கிழமை முதல் முழு அளவில் சீராக்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துவருவதாக ஸ்ரீ லங்கா ரெலிக்கோமின் யாழ். பிராந்திய முகாமையாளர் கே. ரி. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

தொலைபேசிச் சேவையைச் சீர் செய்ய போதிய அளவு நவீன வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லை எனவும் —

பழைய கேபிள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதால் இலகுவில் சேவை சீர் குலைந்து விடுவதாகவும் அவர் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை - காங்கேசன் கப்பல் சேவை 20 ஆம் திகதி

வவுனியா, ஏப். 5

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்குமிடையிலான கப்பல் சேவை எதிர்வரும் 20 ஆம் திகதியளவில் நடத்தப்பட உள்ளதாகவும் —

அதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறும் — மன்னார் அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக இரண்டு கப்பல் சேவைகளிலேயே அகதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் மோதல்!

வவுனியா, ஏப். 5

ஆனையிறவுப் பகுதியில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் 2 ஆம் லெப்ரினன்ட் தீபன் அல்லது அப்பா (எம்·எஸ். சிறிகுமார் —இலுப்பைக்குளம்), வீரவேங்கை கபிலன் (சிவக்கொழுந்து அன்புச்சுதன்— வட்டக்கச்சி) ஆகியோர் களப்பலியானதாகபுலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. (இ-7)

## குஞ்சுக்குளம் பகுதியில் மோட்டார் தாக்குதல்

வவுனியா, ஏப். 5

வன்னி குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள படையினரின் பாதுகாப்பு காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் கடந்த வியாழக்கிழமை மோட்டார் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

படையினர் மோட்டார் மற்றும் ஆட்லறி கொண்டு பதில் தாக்குதல் நடத்தியதாகவும் —

அப்பகுதியை தொடர்ந்து தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ஈமக்கிரியைகள் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 5

கடந்த திங்களன்று காலமான கல்வி வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசாவின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு அவரது சொந்த ஊரான வேலணையில் இடம்பெறவுள்ளன.

கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் காலை 7.30 மணிக்கு சமயக் கிரியைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து இரங்கல் உரைகள் இடம்பெறும். (இ-7)

## 5 மாகாண சபைகளுக்கு ஒகஸ்ட்டில் தேர்தல்கள்!

### வடக்கு - கிழக்குக்கு இப்போதைக்கு இல்லை

கொழும்பு, ஏப். 5

வடக்கு - கிழக்கு, வடமேல், தென் மாகாணசபைகள் தவிர்ந்த ஏனைய ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் நடத்தப்படவுள்ளன.

நீதி, அரசமைப்பு விவகாரம், இனவிவகாரம், தேசிய நல்லிணக்க அமைச்சர்பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் சங்கத்தின் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு–கிழக்கு, வடமேல். தென் மாகாண சபைகள் தவிர்ந்த ஊவா, மேல், வடமத்திய, மத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகள் எதிர்வரும் ஜூலை மாதத்தில் கலைக்கப்படுமெனவும்—

அதனைத் தொடர்ந்து ஒகஸ்ட் மாதத்தில் அம் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுமெனவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார் (இ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாயில்

## ஒரு புதிய வைத்தியசாலை

(நகரசபை முன்)

**Dr. க. சிவனடியான்**

நேரம்: தினசரி மாலை 3-00—6-30 வரை

(54469)


## உள்ளம் நெகிழ்ந்த கண்ணீர்ப் பூக்கள்

அமரர்

**சுப்பிரமணியம் இரத்தினராசா S.L.E.A.S.**

(கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்—1)

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மனத்தில் அழியா இடம் பெற்ற அமரரான கல்விப் பணிப்பாளருக்கு எமது உள்ளம் நெகிழ்ந்த கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கு கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும் பத்தினர், உறவினர்களுக்கு எங்களது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்,

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

(சி/3323)

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 1இன் கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களது மறைவு குறித்து அதிர்ச்சியடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபத்தையும். இதய அஞ்சலியையும் காணிக்கை யாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்
யா/ பெரியபுலம் ம. வி.

(50023)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சு. இரத்தினராசா**

யாழ். கல்வி வலயம் 01 இன் கல்விப்பணிப்பாளர் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

தென்மராட்சிப் பாடசாலைகளின்
அதிபர்கள் சங்கம்.

(சி/3345)

## எமது இதய அஞ்சலி

மனித நேயம் மிக்க நிர்வாகியாக விளங்கி எமது சமுதாயத்தின் மேன்மைக்காக உழைத்த யாழ். கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர்

**உயர்திரு. சு. இரத்தினராசா**

அவர்கள் சிவபதமடைந்தமை எமக்குப் பேரிழப் பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திப்போமாக!

வடமாகாண அதிபர்கள் சங்கம்.

(54604)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வலயம் 1-இன் கல்விப்பணிப்பாளராகவும், எமது கிளைச் சங்க பதவிவழி உபதலைவர்களில் ஒருவராகவும் விளங்கிய

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

யாழ். மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம்.

(54658)

## ஆறா நினைவூற
## ஆத்மா சாந்தி பெற....

**அமரர் சு. இரத்தினராசா**

(வலயம் 1, கல்விப் பணிப்பாளர்)

தேடி அறிவுப்புலம் தேற்றிய வேளையில்
வாடிய (சு) வாசமே!
கல்விக் களத்தின் ஆளுமை அரசே, உறவின்
உவமையே உள்ளழகு மனிதா
நோகின்றோம் உன் இழப்பால்!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை

(54586)

## 280 பேர் பலி!

நைஜீரியாக் கரைக்கு அப்பால் அட்லாண்டிக் சமுத்திரத்தில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 280 பேர் பலியாகினர். மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. (இ-9)

## கூட்டம்

தென்மராட்சி, ஏப். 5

பளை வேம்போடுகேணி சீ. சீ. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-117)

★ ★ ★

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட கூட்டம் நாளை திங்கள் காலை 10 மணிக்கு சங்கக் கூட்டுறவு மண்டபத்தில் சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

கூட்டத்திற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் (நிருவாகம்) செ. கு. சண்முகநாதனும், கூட்டுறவு ஆக்க ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோ.திருநாவுக்கரசுவும் கலந்து கொள்வர். (ஐ-117)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலைகளின் அதிபர் சங்கக் கூட்டம் நாளை திங்கள் பி.ப. 2.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சங்கத் தலைவர் சி. துரைராசா தலைமையில் நடைபெறும்.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 5

புது வருடத்தையொட்டி யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 4.30மணிக்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் வி. க. அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதும். (உ)


எமது புதிய
வெளியீடுகள்!
★ TITANIC
★ Tomorrow Never Dies
மற்றும் எமது
CD வெளியீடு!
★ உயர்ந்த உள்ளம்
சோலை வீடியோ
பிரதான வீதி, நெல்லியடி.
(54650)

A/L 99 & 2000
பொருளியல்
Mr. இராஜேஸ்வரன் B. Com.
இந்து சமயம்,
இந்து நாகரிகம்
Mr. நித்தியானந்தன் B.A.
இளஞ் சைவப் புலவர்,
சித்தாந்த பாலபண்டிதர்
கிறிஸ்தவம்
Mrs. A. மல்லிகா B. A.
SHAMROCK
(54673)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
ஞாயிறு, திங்கள்
கார்த்திக் - மோகன்
ரேவதி நடித்த
மௌனராகம்
செவ்வாய், புதன்
விஜய் - சங்கவி
விஜயகுமார் நடித்த
ரசிகன்
நேரம்:- 10-30, 2-30
தொலைபேசி இல. 070- 212223
(54347)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இராஜரட்ணம்

(O.I.C. சிறைச்சாலை)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும், கொல்லன் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப் பாறிய சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி கந்தையா இராஜரட்ணம் 01-04-98 இல் சாவகச்சேரியில் கால மானார்.

02-04-98 ஆம்திகதிய பத்திரிகை அறிவித்தலின்படி அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05-04-98) காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தக னக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி இராஜரஞ்சினி யோகானந்தம் (மகள்)
16, கந்தையா வீதி,
வைத்தியசாலை முன்பாக,
சாவகச்சேரி.

(சி/3330)

## செல்லப்பா ஜெயந்திரன்

கோப்பாய் வடக்கு வராம் பற்றையைப் பிறப்பிட மாகக் கொண்டவரும் ஜேர்மனியில் வசித்தவருமான செல்லப்பா ஜெயந்திரன் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் செல்லப்பா சிவஞானம் தம்பதிகளின் ஏக புதல்வனும் பாலசுப்பிரமணியம் தம்பதியரின் மருமகனும் சசிகலாவின் அன்புக்கணவரும் ஜெயந்தி, மாலதி, ஜெயராணி, சிவசாந்தி, கலாநிதி ஆகியோ ரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4-4-98 இல் ஜேர் மனியில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உற வினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ் மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
பொ. கதிர்காமநாதன் (சகோதரர்)
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(54677)

## பிரம்மஸ்ரீ சோமசுந்தரஐயர் சதாசிவக்குருக்கள்

நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஐயர் சதாசிவக் குருக்கள் 4-4-98 இல் காலமாகி விட்டார்.

இவர் புவனேஸ்வரி அம்மாவின் அன்புக் கண வரும் ஞானேஸ்வரி, விமலாதேவி, தேவசேனா, சாந்தா, சத்தியோஜாதசர்மா, சத்தியஜெயன் ஆகி யோரின் அன்புத்தந்தையும் சோமாஸ்கந்தக் குருக் கள், சிவசுப்பிரமணிய சர்மா, அமரர் மாணிக்கஐயர், கனக சபாபதிசர்மா, வித்தியா, கீதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிறு 5-4-98 பிற்பகல் 1.00 மணியளவில் நீர்வேலி மயானத் தில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சா. சத்தியோஜாதசர்மா (மகன்)
நீர்வேலி மத்தி.

(54679)

## கார்த்திகேசு கருணானந்தன்

(உரிமையாளர், சிவகிரி ஸ்ரோர்ஸ், வெள்ளவத்தை)

துன்மலை இளவாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தி கேசு கருணானந்தன் 01-04-98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேசு சிவயோகபாக் கியம் ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், சிவபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜீவானந்தனின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற சிவானந்தம் தங்கராணி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04-04-1998 சனிக் கிழமை நடைபெற்று பூதவுடல்கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உற வினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. கார்த்திகேசு
G. 6, அரச தொடர்மாடி,
கொழும்பு - 04.

(சி/3350)

## வயிரமுத்து தங்கம்மா

நாவற்குழி கிழக்கு கோவிலாக்கண்டியைச் சேர்ந்த வயிரமுத்து தங்கம்மா 4-4-98 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற வினாசி வயிரமுத்து அவர்களின் மனைவியும், தியாகராசா, நடராசா, காலஞ்சென்ற சரவணமுத்து, நல்லம்மா, ஜெகராசா, வேலய்யா, சீனிவாசகம், பராசக்தி, தங்கரத்தினம், பரராசசிங் கம், சிவராசா, நாகேஸ்வரி, பரமேஸ்வரி, அழக ராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், முத்தையா, பரமசாமி, செல்லையா, கனகரத்தினம், பாலேந் திரா, இராசமணி, சரஸ்வதி, தங்கம்மா, அன்னலட் சுமி, நாகேஸ்வரி, புனிதவதி, புஸ்பராணி, இரா ஜேஸ்வரி, காலஞ்சென்ற கத்தரின், ஆசா ஆகியோ ரின் மாமியும் ஆவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் 5-4-98 இன்று ஞாயிறு காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நாவற் குழி பிணமுருங்கையடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. ஜெகராசா (மகன்)
நாவற்குழி கிழக்கு,
கோவிலாக்கண்டி,
நாவற்குழி.

(54660)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சு. இரத்தினராசா**

(கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம் 1)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.

(54609)

## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் கல்விக் கோட்ட
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**அமரர். சு. இரத்தினராசா**

அவர்கள் காலமான செய்தி கேட்டு மிகுந்த துயரம் கொண்டுள்ளோம். கல்விச் சமூகத்தின் வளர்ச்சிக்காக உழைத்த அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.

(சி/3300)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளராகப் பண்பும் அன்பும் அணியெனக் கொண்டு அரும்பணியாற்றித் திடீரென மறைந்த

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் பிரிவை எண்ணிக் கலங்குவதுடன் அவரைப் பிரிந்து பரிதவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பாடசாலை கட்டட வேலைகள் கிளையின்
அலுவலர்கள்.

கல்வித்திணைக்களம், செம்மணி வீதி,
நல்லூர்.

(54578)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம்
வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும், குடும்பத்தினருக்கும், கல்விச் சமூகத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

பா. அ. சங்கம் பழைய மாணவர்கள்.

யா / ஊர்காவற்றுறை புனித மரியாள்
மகளிர் வித்தியாலயம்

(54631)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சு. இரத்தினராசா**

(கல்விப் பணிப்பாளர் வலயம் - 01)

அவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,

யா/ உயரப்புலம் மெ.மி, த.க.வித்தியாலயம்,
ஆனைக்கோட்டை.

(54581)

## கண்ணீர் அஞ்சலி

நீதி, சமத்துவம் என்ற மனிதப் பண்புகளைப்
பேணிவந்த சிறப்பும் தனித்துவமும் மிக்க
கல்விப் பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் அகால மறைவு பொதுவாகத் தமிழ்க கல்வி உலகிற்கும் குறிப்பாகப் பின்தங்கிய தமிழ்ச் சமூகத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் மனைவி, பிள்ளைகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்,
ஏழாலை.

(54574)

# யுத்த நிறுத்தம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்து

சமாதான சூழ்நிலை ஒன்றை ஏற்படுதத உடனடியாக யுத்தநிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. இராமேஸ்வரன் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள ''பக்ஸ்'' செய்தி ஒன்றிலேயே இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கொழும்பு மற்றும் இடங்களில் தமிழர் கைது செய்யப்படுவது தொடர்பாக பல தரப்பட்டவர்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும், அதற்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இதற்குக் காரணம் யுத்தம் தொடர்வதேயாகும். யுத்தம் தொடர்ந்து நடைபெற்றால், அரசும், மக்களும் அதில் இருந்து மீள முடியாது என்று நாம் கருதுகிறோம்.

வடக்கு - கிழக்கில் தமது சொந்த இடத்திலேயே அகதிகளாக வாழும் நிலை, பொருளாதார சீரழிவு, கடற்றொழில, விவசாயம் செய்ய முடியாதநிலை, உறவினர்களை, குடும்பங்களை இழந்த துயரம், நாட்டில் எந்தப் பகுதியிலும் தமிழர் வாழ முடியாத நிலை, மாணவர் கல்வியைத் தொடர முடியாதநிலை ஆகிய காரணங்களால் தமிழ்மக்கள் பெரும் பீதியுடனும், விரக்தியுடனும் வாழ்கிறார்கள்.

இந்தநாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் அந்த மக்களின் துயரத்தைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு உங்கள் கைகளிலேயே உள்ளது.

இந்தநாட்டின்சகல பிரச்சினைகளையும் நன்கு உணர்ந்தவர் என்ற ரீதியிலும், சமாதானத்தில் அதிக அக்கறையும், நம்பிக்கையும் கொண்டுள்ளவர் என்ற ரீதியிலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும்— என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Nestlé.

## POST OF MEDICAL DELEGATE

### மருத்துவப் பிரதிநிதிக்கான வெற்றிடம்

பல்வகையான நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் உலகின் மிகப்பெரிய உணவு நிறுவனமான 'நெஸ்லே' பெருமளவு முதலீட்டை இலங்கையில் கொண்டுள்ளது. இந்நிறுவனம் இலங்கையிலுள்ள பாரிய நிறுவனங்களில் ஒன்றாகவும் பல்வகைப்படுத்திய உணவு உற்பத்தியாளராகவும் விளங்குகின்றது.

கொழும்பில் தனது தலைமையகத்தைக் கொண்டு இருப்பதுடன் பன்னலவிலும் பொலன்னறுவையிலும் இரு தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. இலங்கை முழுவதற்கும் பரந்த விநியோக சேவையைக் கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றக்கூடிய தகுதியான விண்ணப்பதாரர் நிறுவனத்திற்குத் தேவையாகவுள்ளது. தகுதியான விண்ணப்பதாரர் மட்டக்களப்பு/ திருகோணமலையைத் தனது வதிவிடமாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பதாரர் சிறந்த ஆளுமை, கடின உழைப்பு, சுயமுயற்சி ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டியதுடன் சிறந்த தொடர்பாடல் ஆற்றல்களையும் கொண்டிருக்க வேண்டும். ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். சிங்கள மொழியில் தேர்ச்சி இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும். விண்ணப்பதாரர்கள் **21 — 40** வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் ஆகக்குறைந்தது க. பொ. த. (உ/த) விஞ்ஞான பிரிவில் இரசாயனவியல் உட்பட சித்தியடைந்திருத்தல் வேண்டும். மருத்துவத்துறை தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

தெரிவு செய்யப்படுபவர் இரு நோக்கிற்கு பயன்படுத்தக் கூடிய வாகனத்தை ஓட்டக்கூடிய ஆற்றல் உடையவராகவும் வலிதான வாகன அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியான நபருக்கு முன்னேறுவதற்கு நல்ல வாய்ப்புக்கள் உண்டு. தகுதியான நபருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

உங்களுக்குத் தகுதி உண்டு என நீங்கள் கருதினால் எமது நிறுவனத்திற்கு உங்கள் விண்ணப்பத்தை ஆங்கிலத்தில் உங்களைப் பற்றிய முழுமையான விவரங்கள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி, கல்வி மற்றும் வேறு தொடர்புடைய சான்றிதழ்கள், உறவினரல்லாத உங்களைப்பற்றி சான்றிதழ் வழங்கக் கூடிய இரு நபர்களின் பெயர்களுடன் கீழ்க் காணும் முகவரிக்கு ஏப்ரல மாதம் **15** ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக அனுப்பி வைக்கவும்.

**Head Office:**

**Human Resources Manager,**
**Nestle Lanka Limited,**
440, T.B. Jeyah Mawhata,
Colombo - 10.

(சி/3230)

Nestlé NESPRAY · Nestlé MILO · Nestlé NESTOMALT · Nestlé NESTUM · Nestlé Milkmaid · MAGGI

**PROUDLY MADE IN SRI LANKA**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி முன்னாள் ஆசிரியரும்,
யாழ். கல்வி வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளருமான

## அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

அவர்களின் மறைவு எமக்கு ஆழ்ந்த கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது மனைவி, பிள்ளைகளுக்கும், சுற்றத்தினருக்கும் ஆறுதல் கூறுவதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர்கள்.
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி

(சி-3337)

# இதய அஞ்சலி

யாழ். வலயம் - 1இன் கல்விப்பணிப்பாளர்

## அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

அவர்களின் மறைவு குறித்து எமது இதய அஞ்சலியை செலுத்துகிறோம், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்து சிதம்பரேஸ்வரரை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச்சபை, பழையமாணவர்க,ள்
ய ாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

(54642)

# இதய அஞ்சலி

## அமரர் சு.இரத்தினராசா

(கல்விப்பணிப்பாளர், வலயம் 01)

கல்வி உலகிற்கு அளப்பரும் பணிகளாற்றி இறைபதம் எய்திய அமரர் சு. இரத்தினராசா அவர்களுக்கு, எமது இதயம் நிறைந்த அஞ்சலியைக் காணிக்கை ஆச்குவதுடன் அன்னாரது குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்சள்,
யா/நவாலி மகாவித்தியாலயம்.

(50027)

# கண்ணீர் அஞ்சலி

## சுப்பிரமணியம் இரத்தினராசா

(கல்விப்பணிப்பாளர், வலயம்-1
யாழ்ப்பாணம்,)

அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினர்க்கும், சுற்றத்தவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், பழையமாணவர்கள் சங்கம்,
பர்டசாலை அபிவிருத்திச் சங்சம்,
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
கொக்குவில்.

(50026)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் -1 இன்
கல்விப்பணிப்பாளர்

## அமார் சு. இரத்தினராசா

அவர்களின் மறைவு குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர்ப் பூக்களை அஞ்சலியாகச் செலுத்துகிறோம்.!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/ விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

(54651)

## அமரர் சு. இரத்தினராசா

அவர்களின் இறுதி யாத்திரையின்

# கண்ணீர் அஞ்சலி

ஏழ்மையில் பிறந்து ஏழ்மையிலேகல்விகற்று அதில் பட்டமும் பெற்று பின்பு கல்வித்துறையிலே தனது தொழிலைப் பெற்று படிப்படியாக பதவிகளோடு செல்வமும் அமைந்திருந்த வேளையிலும் தனது வாழ்க்கையை சாதாரண மக்களோடு அண்டி வாழ்ந்த மாமைந்தனுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

வெஸ்ரா இன்டஸ்றீஸ்,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(50024)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 5

கோப்பாயில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார்சைக்கிளை ஓட்டிச் சென்ற கோப்பாயைச் சேர்ந்த தேவராசா தேவரூபன் (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

## கைகலப்பில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 5

இரு பகுதியினர்களுக்கிடையே இடம் பெற்ற சண்டை கைகலப்பாக மாறியதில் மூவர் பொல் அடிக்கு இலக்காகிக் காயமடைந்தனர்.

நாவற்குழிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் எம். இராசரத்தினம் (வயது 34) அவரது மனைவி இராசரத்தினம் யோகேஸ்வரி (வயது 24), ரி. தியாகராசா (வயது 31) ஆகிய மூவருமே அடிக்கிலக்காகி காயமடைந்தவர்களாவர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-15)

## மணிக்கோபுரத் திருத்த வேலை

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவ சுப்பிரமணியசுவாமி கோயில் புதிய மணிக்கோபுர வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. கருங்கல் வேலையாக நடைபெறும் இக்கோபுர வேலைகள் யாவும வரும் வைகாசி மாதத்திற்கு முன்னர் நிறைவு பெறும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. புதிய மணிக்கோபுரத்தில பொருத்தப்படும் மணி சுழிபுரம் கிராமம் பூராகவும் கேட்கக்கூடியதாக அமையும்.

(ஐ-28)

## குழாய்நீர் விநியோகம் சீராக்க உதவி

நெடுந்தீவு, ஏப். 5

நீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட வெடிப்பைத் தொடர்ந்துபாதிக்கப்பட்டிருக்கும் நெடுந்தீவு குழாய் நீர் விநியோகத்தைப் புனரமைத்து உதவ ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது.

புனரமைப்புக்கு வேண்டிய உபகரணங்களை மேற்படி நிறுவனம் வழங்கும் அதே சமயம் தொழிலாளர்களை சிரமதான அடிப்படையில் பொது அமைப்புக்கள் வேலைக்காக அமர்த்தி உதவ வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து மக்களை சிரமதான முறையில் வேலைகளில் பங்குபற்றக் கோரும் வகையில் ஆலோசனைச் சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-111)

## மானிப்பாயில்

வலிகாமம் தெற்கு, ஏப். 5

கல்வி, உயர்கல்வி அமைச்சின் திட்டத்துக்கமைய ஆசிரிய மூலவள மத்திய நிலையம் ஒன்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அமைக்கப்படவுள்ளது.

இந்நிலைய அமைப்புக்கான கட்டட நிர்மாணம், வளங்கள் போன்ற தேவைகளுக்காக கல்வி, உயர்கல்வி அமைச்சு 20 லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ். மாவட்டத்துக்கென முதன் முதலாக அமைக்கப்பட்டுள்ள ஆசிரிய மூலவள மத்திய நிலையம் இது வென்பது குறிப்பிடத் தக்கது.

(ஐ-152)

# நன்றி கூறல்

இந்து குருமார் ஒன்றியமும் மேற்படி அமைப்பின் கௌரவ வித்துவசபையும் 21-02-1998 சனிக்கிழமை எமது ஆலயத்திற்கு சமுகந்த ந்து ஆலய திருப்பணி வேலைகளின் ஐயப்பாட்டினை நீக்கி, புதிய தேர் முட்டி அமைத்தல் சம்பந்தமாக நல் ஆலோசனைகளும் கூறிச் சென்றமைக்கு நன்றி கூறுகின்றோம்.

தர்மகர்த்தா சபை,
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.

(54611)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 11 — 11 — 1959

இறப்பு: 17 — 03 — 1997

**பாலசிங்கம் தனபாலசிங்கம்**

திதி: 05 — 04 — 1998

காலமே அவரைக் காற்றோடு கலந்திட்டயா?
காற்றே! எம்கதை அவருக்கு கூறாயோ?

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், தாய்,
மைத்துனர், சகலன்.

628/ 2, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.

(54671)

# ஓராண்டு நினைவலைகள்



செல்வன்

## பாக்கியநாதன் ஐங்கரன்

(கரன்)

(மாணவன், இளவாலை சென். ஹென்றீஸ்)

மலர்வு: 28—10—1978

உதிர்வு: 17—03—1997

திதி: 05 - 04 - 1998

மாதவம் செய்து பெற்ற மரகதமே ஐங்கரா!
ஓடி மறைந்ததையா ஓராண்டு . ...... ஆனால்
உன் எழில் வதனம் மறைந்திடுமோ எமை விட்டு
பசுந்தளிர் போல் வளைய வரும் பாதமதை - நாம்
கண்ணாரப் பார்ப்பது தான் இனி எப்போ?
கிள்ளையின் ஒலி போன்ற உன் குரலை - எம்
செவிகளாரப் பருகுகின்ற நாள் வருமோ?
தித்திக்கும் தேனான மென்கரும்பே! உன்னைத்
தேடி அலைந்து தேம்புகின்றோம் நாள் தோறும்......
மாயமாய் நிகழ்ந்திட்ட உன் மறைவை - நாம்
அழுது புரண்டாலும் மனம் தேறிடுமோ?
கணப் பொழுதில் உனைக் கவர்ந்த காலனவன்
கடுகதியாய் உன் கணக்கை முடித்துவிட்டான்!
கண்ணே! நீ மீளாத்துயிலில் ஆழ்ந்து விட்டாய்
கதறுகின்றோம் நாம் இங்கே நீ அறியாய்!

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, உறவினர்கள், நண்பர்கள்.

சண்டிலிப்பாய் மேற்கு.

(சி/3334)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளராக இருந்து அரும்பணியாற்றி அமரத்துவமெய்திய

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னார்தம் குடும்பத்தினர், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்களள, மாணவர்கள்.
**யா. கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.**

(54634)

## கண்ணீர் அஞ்சலி

30-03-1998 அன்று சிவபதமடைந்த யாழ்ப்பாணம் வலயம் -1 இன் கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ நாரந்தனை றோ.க. மகாவித்தியாலயம்.
ஊர்காவற்றுறை.

(54632)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வலயம் 1- கல்விப்பணிப்பாளர்

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா**

அவர்களின் மறைவுச்செய்தியறிந்து அதிர்ச்சியடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்,
பாடசாலை அபிவிருத்திச்சபை,
பழைய மாணவர் சங்கம்.
**யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.**

(54630)

## இதய அஞ்சலி

**லயன் எஸ். இரத்தினராசா**

(கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம் – 01)

சேவையே நோக்கமாகக் கொண்ட எமது கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரான அமரர் எஸ். இரத்தினராசா அவர்களின் திடீர் மறைவு குறித்து அதிர்ச்சியடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தலைவர், செயலாளர், உறுப்பினர்கள்.
**லயன்ஸ் கழகம், கொக்குவில்.**

(54627)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர்

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா**

அவர்களின் திடீர்மறைவை அறிந்து அதிர்ச்சியடைந்தோம். துயருற்றிருக்கும் அன்னாரது மனைவி, பிள்ளைகளுக்கும், சகோதரர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவிக்கின்றோம். அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்....

பிரதேச செயலாளர்,
செயலக உத்தியோகத்தர்கள்,
கிராம உத்தியோகத்தர்கள்,
சிற்றூழியர்கள்.

பிரதேச செயலகம்,
தீவுப்பகுதி தெற்கு,
வேலணை.

(54645)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா**

அவர்கள்

கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம் 01

தீவகம் தந்த தீரர்
திருவுடை அறிவுச் சீலர்
பார்புகழ் கல்வி தன்னை
பரந்தெமக்களித்த வள்ளல்
ஊன் உடல் நீங்கி இன்று
உறைகின்றார் இறையடியில்
உள்ளமே உருகி நாமும்
உதிர்க்கின்றோம் கண்ணீர் தன்னை!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்.

(54667)

## திறந்த பல்கலைக்கழக விண்ணப்பங்கள்

வலி. தென்மேற்கு, ஏப்.5

விஞ்ஞானமானி, விஞ்ஞானத்தில் கல்வியில் பட்டப்படிப்பு மானி கல்வி நெறிக்கான விண்ணப்பங்கள் இலங்கை திறந்தபல்கலைக் கழகத்தினால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உள்ள இணைப்பு நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1997—1998 கல்வியாண்டில் மேற்படி கற்கைநெறிக்கு பதிவு செய்த மாணவர்களையும், புதிதாகச் சேரவுள்ள மாணவர்களையும் உடன் மத்திய கல்லூரியில் உள்ள இணைப்பு நிறுவனத்தில் தொடர்பு கொள்ளுமாறு இணைப்பாளர் ச. ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார். (ஐ-185)

## இசை விழா

கைதடி, ஏப்ரல் 5

கைதடி மத்தி குமரநகர் முன்பள்ளிமழலைகள் கல்விப் பூங்கா நிறுவன வளர்ச்சிக்காக நடத்தப்படும் இசை விழா நாளை திங்கள்கிழமை இரவு 8.00 மணிக்கு கைதடி குமரநகர் வாலாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கைதடியூர் சத்தியநாதன் குழுவினரினதும், தாவடிமேற்கு மகளிர் குழுவினரினதும் நாதஸ்வரக் கச்சேரியும், ஈழநல்லூர் அருணா இசைக் குழுவினரின் இசை மழையும் இடம் பெறவுள்ளன. (ஐ-ரீ)

## பாடசாலைகளில் கறுப்புக்கொடி

நெடுந்தீவு, ஏப்ரல் 5

மறைந்த கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நெடுந்தீவு கோட்டப் பாடசாலைகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டுள்ளன.

இங்குள்ள கல்விக் கோட்டப் பணிமனையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், அதிபர்கள், ஆசிரியர்களும் கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் அவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். (ஐ-111)

## சண்டிலிப்பாயில் 10 பேருக்கு வீடமைப்புக் கடன்

சண்டிலிப்பாய், ஏப். 5

வலி. வடக்கு பிரதேச செயலர்பிரிவில் வீடமைப்புக் கடனாக 20ஆயிரம் ரூபாவை பெறுவதற்கு 10 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இதற்கான முதற் கட்ட கொடுப்பனவு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இக் கடனை மேலும் பலருக்கு வழங்குவதற்கான நிதி தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் — இக் கடனைப் பெற விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்றும் வலி. வடக்கு மற்றும் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பிரிவுகளுக்கான வீடமைப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தர் சி. நாகேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை —

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப்பிரிவிலும் 10 பேருக்கு 20 ஆயிரம் ரூபா வீடமைப்புக் கடன் வழங்கப் பட்டுள்ளது. வீடுகள் சேதமடைந்தவர்கள் அதனைத் திருத்துவதற்கும், சிறியளவிலான வீடுகளை அமைப்பதற்கும் இக் கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது. (ஐ-135)

## இதய அஞ்சலிகள்

இன்று வேலணை மண்ணில் தீயுடன் சங்கமமாகும்
அஞ்சாமை மிக்க, தனித்துவம் பெற்ற
வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா (S- L E.A.S)**

அவர்களின் ஆத்மா இறைபதம் அடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ கொக்குவில்
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை

(சி/3331)

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவு குறித்து அதிர்ச்சியடைவதுடன் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், இதய அஞ்சலியையும் காணிக்கையாக்குகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/ ஆனைக்கோட்டை
றோ. க. த. க. பாடசாலை.

(54609)

## கண்ணீர் அஞ்சலி

இதயக் கூட்டில் உயிர்ப்பறவை ஒன்று
சிறகடித்து ஓய்ந்ததாம்.
உறவும் நட்பும் கலங்க உயரப்பறந்து
விண்ணில் கலந்ததாம்
கூடிப்பறந்த பறவை எல்லாம்
தேடித் தேடித்தவிக்குதாம்
வரவு தேடி இங்குளோர் காத்திருக்க
வானகத்துக்குச் சொந்தமானதாம்.
வாழும் வரை மாறாத துயர் தந்து
தெய்வமாகிச் சென்றதாம்!

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா**

(கல்விப்பணிப்பாளர் யாழ். வலயம் - 1)
அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/மண்டைதீவு மகாவித்தியாலயம்,
மண்டைதீவு.

(54664)

## கண்ணீர் அஞ்சலி

30-03-98 அன்று சிவபதமடைந்த யாழ்ப்பாணம் கல்வி வலயம்-1 இன் கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/ புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

(54644)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா**

(கல்விப்பணிப்பாளர், வலயம்-I யாழ்ப்பாணம்)

கல்விப் பணிப்பாளர் அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா அவர்களின் திடீர் மறைவு கேட்டு நாம் அதிர்ச்சியடைந்தோம். அன்னாரது இழப்பு தீவக கல்விக் கோட்டங்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

மிகப் பெரிய சோகத்தை தாங்கி நிற்கும் அவர்தம் மனைவி, மக்கள், உடன் பிறந்தார், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

கோட்டக்கல்வி அலுவலர்கள்,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.
வேலணை,
ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டங்கள்.

வேலணை.

(54643)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளை தெளிவாகபார்ப்பதற்குபுதியஅன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவற்கும் பூஸ்ரர்களை பழுது பார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் B. Sc Ceylon Dip. In Electronic Engineering London 284, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரை முன்பாக), யாழ்ப்பாணம். (சி/3295)

### தவறிவிட்டது

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த குணசேகரம் சரஸ்வதி என்னும் பெயருடைய எனது விசேட அடையாள அட்டை மானிப்பாயில் இருந்து சங்கானைக்குப் போகும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கனகசபை வீதி, மானிப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். [54626]

மரியதாஸ் சரஸ்வதி என்பவரது 536063447V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை என்பன வல்லிபுரக்கோயில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். வே. தவச்செல்வன் 'உதயன்' செய்தியாளர், மாமுனை வடக்கு, செம்பியன்பற்று. [54619]

### மணமகன் தேவை

வசதியுள்ள கௌரவமான கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் தங்களுடைய 25வயதுள்ள அழகிய கனிஷ்ட புத்திரிக்கு 32 வயதுக்கு உட்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன் தேவை. தொடர்பு: இல. 723, C/o உதயன், யாழ்ப்பாணம். [54515]

### பூச்செடிகள்

செவ்வரத்தை, குறோட்டன். பாம் ஒறக்கேரியா, பான்சைப்பிரஸ், சில்வர் சைப்பிரஸ், மினி எக்ஸ்சோறா, பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. பாக்கியநாதன், 152/2, கோயில்வீதி, யாழ்ப்பாணம். [54615]

### O/L கணிதம்

விசேடமாக 6 – 10 வரை உயர்ந்த பெறுபேறடையவும் வாரம் 5 மணித்தியாலம் வீதம் O/L இல் Distinction, Credit பெறுபேறடையவும் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி, [54654]

### காணி விற்பனைக்கு

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலைக்கு முன்பாக கண்டி வீதியில் இருந்து 100 யார் தூரத்தில் 36பரப்பு வீடு கட்டும் காணி அரை விலையில் விற்பனைக்கு உண்டு. பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: விசுவரெத்தினம், 103, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் அல்லது தெய்வேந்திரன், இல. 23, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். [54665]

---

## விழி நீரே விதிவழியே அடைக்குமெனில்...

### அமரர் சு. இரத்தினராசா

வழி காட்ட ஒரு நல்ல மன பெருமனிதன்
உள்ளார் என்றே
உள மகிழ்ந்து இருந்திட்டோம்
வெள்ளை மனப் பேச்சின்
வெகுண்டெழும்பும் வார்த்தையிலும்
கள்ளமில்லா ஒரு தெளிவு
கண்டோம் மனந்தெளிந்தோம்
இருப்பினிலே நிறைவு கொண்ட
பொழுது திரும்பு முன்னே — தன்
இருப்பை அறைந்ததென்ன
மரணம் ........?
சு. இரத்தினராசாவாம் இன்மனத்தோன்
— எமைப்பிரிய
நோய் வடிவில் உயிர் குடித்த
விதியை நொந்து
விழி கலங்கி மனம் வெதும்பி
நிற்கின்றோம்!
வேறெது செய்வோம்?


அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா. அ. சங்கம்,
யா/ கல்வியங்காடு
இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

(54636)

---

## நீங்காத நினைவில் ஓராண்டு நினைவலைகள்



அமரர்

### நடேசு ஜெகதீஸ்வரன்

(மகேந்திரம்)

தோற்றம்: **14 — 02 — 1964**
மறைவு: **17 — 03 — 1997**
திதி: **05 — 04 — 1998**

அன்பால் பண்பால் அறிவால் பாசத்தால்
எங்களை வழி நடத்தி திடீரென மறைந்து விட்ட
எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள்
மறைந்து ஓராண்டு ஆகிவிட்டாலும்
வழி காட்டும் தெய்வமாக என்றென்றும்
நின்று நிலைத்திட உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

நீங்காத நினைவுடன்...

சகோதரர்கள்: விக்கினேஸ்வரன், வனராஜ்(லண்டன்), ஜெயகோபி (மல்லாவி), பிரபாகரன், (சுவிஸ்), சுரேசன், சுபேந்திரன்.
சகோதரிகள்: ஜெதீகஸ்வரி, பாமினி,
மைத்துனர்: தெய்வேந்திரம்
மைத்துனிகள்: ரேவதி, வக்சலா, கலாவதி
மருமக்கள்: அகிலன், சயந்தினி, ரஜீதா, அனுசன்.
மக்கள்: அஜந்தன், மிதுஜா, துலக்சனா, கௌசிகா.

நவாலி அரசடி,
மானிப்பாய்.

(54594)

---

## குரு பூசை விழா

வதிரி

### ஸ்ரீ பரமானந்தா சுவாமி

வதிரி, ஸ்ரீ பரமானந்தா சிறார், முதியோர் ஆச்சிரம இல்ல ஸ்தாபகர் ஸ்ரீ பரமானந்தா சுவாமி அவர்களின் 3 ஆவது குருபூசை ஆச்சிரம வளாகத்தில் நிகழும் ஈசுர வருடம் பங்குனி மாதம் ஆயிலிய நட்சத்திரம் கூடிய பங்குனி 23 (06 - 04 - 1998) திங்கட்கிழமை நடைபெறும். அன்று அபிசேக ஆராதனை பஜனையுடன் பகல் மகேஸ்வர பூசையும் இடம் பெறும்.

அனைவரும் வருக குருவருளும் திருவருளும் பெறுக!

- தருமகர்த்தாக்கள் சபை

ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமம்,
வதிரி, கரவெட்டி.

(சி-3317)

---

## துரித சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில்
வாழ்த்துக்கள், விளம்பரங்கள்,
மரண அறிவித்தல்கள்
யாதேனுமொன்றை நீங்கள் கொடுக்க விரும்பின்

First Floor, 220, Stanley Road, Jaffna
வில் அமைந்திருக்கும்

**THAYA ADVERTISING AGENCY & COMMUNICATION CENTRE**

இங்கு உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி FAX தொடர்புகளும், Photostat மெஷினெட் வசதியும் செய்து கொடுக்கப்படும்.

Phone:- 021 - 2234
Fax:- 021 - 2234.

(54608)

---

## Under The Education Programme of the Lions Club of Nallur



Lion R. Nadarajah of Church Lane, Urumpirai East, Urumpirai is transferring a Fixed Deposited amount to the Lions Club of Nallur in memory of his Late Wife Mrs. Jegatheeswary Nadarajah, B. Sc. who had been a teacher at the Vasavilan Mathiya Maha Vidyalayam.

This amount will be in Fixed Deposit and the interest of this amount is to be utilized for helping the needy financial constraint students to continue their higher studies.

Lion. G. Ramachandran,
President,
Lions Club of Nallur.

(C/3299)

---

## ரிப்ரொப் இன்டர் நஷனல் பிரைவேட் கம்பனியினரின் பூட்டு மார்க் கைலிகளின்

வடமாகாண ஏக விநியோகஸ்தர்களாக **த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்** ஸ்தாபனத்தினரை நியமித்துள்ளோம் என்பதனை வடமாகாண வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தயாரிப்புக்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:

# த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

42, 44, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 – 2985
தற்காலிக முகவரி: 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(54511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

## வருடாந்த பங்குனிப் பொங்கல் விழா

07 – 04 – 98 செவ்வாய்க்கிழமை

### நிகழ்ச்சி நிரல் விவரம்

| | |
|---|---|
| காலை 6-00 மணி | — பூசை |
| காலை 6-30 மணி: | — முதல் வழுத்துப் பானை ஏற்றும் வைபவம், தொடர்ந்து பி.ப. 4-00 மணிவரை பொங்கல் நிகழ்ச்சிகள் இடம்பெறும். |
| முற்பகல் 10-00 மணி | — ஸ்நபன அபிஷேகம் |
| முற்பகல் 11-00 மணி | — பூசை, திருவீதி உலா கூட்டு வழிபாடு |
| பிற்பகல் 2-30 மணி | — பூசை |
| பிற்பகல் 3-00 மணி | — வசந்தமண்டபப் பூசையும் அம்பாள் எழுந்தருளி உள்வீதி, வெளிவீதி திருஉலா வருதலும் |
| பிற்பகல் 4-30 மணி | — அர்த்த சாமப் பூசை |

தேவஸ்தான நிர்வாக சபை

(சி-3218)

## யோகர் சுவாமி குருபூசை

கொழும்புத்துறை, ஏப். 5

கொழும்புத்துறை யோகர் சுவாமியின் குருபூசை சுவாமி சமாதி கோயிலில் நாளை திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு விசேட அபிஷேகம், ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

இவ் வைபவத்தில் சுவாமிகளின் நற்சிந்தனை, பஜனை கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் என்பனவும் இடம் பெறும்.

நண்பகல் 1:00 மணிக்கு அன்னதானமும் நடைபெறும். (ஐ-30)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20 — 05 — 1955

உதிர்வு: 15 — 03 — 1989

### அமரர் முத்து மனோகரன்

(புலோலி தெற்கு, கூவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியரும்.)

திதி: 05 — 04 — 1998

ஆண்டொன்பது ஆனதையா- உன்
அன்புமுகம் காணாமல்
மீண்டொருகால் வந்திங்கே- உன்
மனந்திறந்து பேசாயோ?

உங்கள் பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா, சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
உற்றார், உறவினர்.

(54613)

## வீடு விற்பனைக்கு

இலக்கம் 64/1, வைமன் வீதியில் அமைந்துள்ள இரண்டு பரப்புக் காணியில் 4 படுக்கை அறைகளைக் கொண்ட 2,900 ச. அடி விஸ்தீரணமும் கொண்ட மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**தில்லைநாதன்**
64/1, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(54662)

## திருமறைக் கலாமன்றம்
## CENTRE FOR PERFORMING ARTS

பெருமையுடன் வழங்கும் Presents

## சிலுவைச் சுவடுகள்

திருப்பாடுகளின் காட்சி PASSION PLAY

**1998 ஏப்ரல் 04 (சனி)**
**05 (ஞாயிறு)**

பிரவேசம்: இலவசம்
தொடங்கும் நேரம் மாலை 6-15 மணி
இருதினங்கள் மட்டும்

மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள் மட்டுமே உள்ளதால் ஆசனம் விரும்புவோர் முன்னதாகவே அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

முக்கிய கவனிப்பு: காட்சி முடிந்து மக்கள் வீடு செல்வதற்கு வசதியாக மேற்குறிப்பிட்ட தினங்களில் யாழ். உதவி அரசாங்க அதிபரின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மட்டும், ஊரடங்குச் சட்டம் இரவு 10 மணிவரை தளர்த்தப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச் செயலர்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3332)

## ஆங்கிலம் தபால் மூலம்

G C E மாணவர்கள் திறமைச்சித்தி பெறவும், ஏனையோர் திறம்பட எழுதப் பேசவும் ஆங்கிலம் தபால் மூலம் பயிற்றப்படுகின்றது. பெறுமதி வாய்ந்த சான்றிதழும் உண்டு. முத்திரையொட்டி சுயவிலாசமிட்ட நீள உறையுடன் எழுதவும்.


GERARD JOSEPH
(Director - Training)
LAMPS Ltd.

(தொழில் வாய்ப்புகள் செய்து கொடுக்கும் நிறுவனம்)

76, Maha Veethiya,
(Grand Street)
Negombo.

(54128)

## OUR SINCERE THANKS



MRS.
SELVAKUMARY BALASEGARAM
[ SELVI ]

Expired 05 - 03 - 1998

With Treasured Memories
We Love and Miss You
May SELVI Rest in Peace

We. wish to express our sincere thanks to all Relations and Friends who attended the funeral, helped in numerous ways, expressed their grief and sympathy, sent messages of condolence and floral tributes during our recent bereavement.

We express our special gratitude to the Sai devotees who participated in singing Sai bhajans.

We regret our inability to thank each one individually.

C. Balasegaram,
B. Rajini,
B. Satheesh.

37/2, Wyman Road,
Nallur,
Jaffna.

(54655)

## நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

### ஸ்தாபனத்தாரின் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

கடந்த 47 வருடங்களாக குடாநாட்டு மக்களின் தேவையைத் தங்களின் ஆதரவுடன் பூர்த்தி செய்துள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். தொடர்ந்தும் எங்கள் ஸ்தாபனத்தில் எமது வாடிக்கையாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் கீழே சொல்லப்பட்ட பொருள்கள் விற்பனைக்கு உள்ளன.

★ மின்சார உபகரணங்கள்
★ எஸ்லோன் பைப் வகைகள்
★ வோஸ் பேசின், ஸ்கொற்றிங்பான், மாபிள் வகைகள்
★ எவரெடி பற்றறிகள்
★ றொபின் வாட்டர் பம்புகள் - EY - 15 EY - 20
★ பிலிப்ஸ் மின் பல்புகள் (வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்)

பிலிப்ஸ் பல்புகள் (25 W - 100 W) சில்லறை விலை - 27/50
வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

[54521] T. P. NO. 2037

வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு **மாபெரும் மலிவு விற்பனை**

❈ நங்கையர்க்கேற்ற புதிய சாறி வகைகள் ❈ ஸ்கேட் அன் பிளவுஸ், ❈ கவுண் வகைகள்
❈ சிறுவர்க்கேற்ற பேபிசூட் ❈ ஆடவர்களுக்கேற்ற ரவுசர்கள் ❈ சேட் ❈ ரீ சேட் வகைகளையும்
மற்றும் துணிவகைகள் அனைத்தையும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ளலாம்.

அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்! முந்துங்கள்!! இச்சலுகை சில தினங்களுக்கு மட்டுமே!!!

## ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(54641)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் தெற்கைச் சேர்ந்த
செல்வன்

### யோகநாதன் ஸ்ரீபவன்

அவர்களின் பிரிவுத் துயரால் சோகக் கடலினுள் மூழ்கி இருக்கும் பெற்றோர், சகோதரர் யாவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு.திருமதி சோ. கேதீஸ்வரசர்மா,
கற்பகவிநாயகர் தேவஸ்தானம்,
நல்லூர் தெற்கு.

(54598)

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் I இன் கல்விப் பணிப்பாளர்

### அமரர் சு. இரத்தினராசா

அவர்களின் மறைவு குறித்து அதிர்ச்சியடைவதுடன் அன்னாரினது குடும்பதினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி.
(54646)

## கண்ணீர் அஞ்சலி

எம் தீவக மண்ணின் மைந்தன்

### அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

(S. L. E. A. S)
கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம் 1

அன்னாரது பேரிழப்பினால் துயருறும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை வடக்கு கிராம
அபிவிருத்திச் சங்கம்,
வேலணை வடக்கு கிராம சேவையாளர்,
வேலணை.
[54637]

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சு. இரத்தினராசா

ஆற்றலும் அறிவும் அமைவுறப் பெற்ற
போற்றுதற்கரிய பெரிய — நின்
சேவை நீளப் பெறாது —
ஆற்றொணாத் துயரில்
தன்னல மற்ற சேவையாளனே!
பேரின்பப் பெருவாழ்வில்
நிலைக்க வேண்டினோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ வேலணை ஆத்திசூடி வித்தியாலயம்,
வேலணை.
[54641]

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கல்வித்திணைக்களம் வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளரும், எமது முன்னாள் உடுவில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளருமாகிய

### அமரர் சு. இரத்தினராசா

அவர்களின் மறைவு குறித்து அதிர்ச்சியடைவதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/தாவடி இ. த. க. பாடசாலை
கொக்குவில்
(50022)

## உடையமைத்தல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 5
வண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் உடை அமைத்தல், சிகை அலங்காரம் ஆகிய இரு பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சிபெற விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

## கோப்பாயில் வாகன அனுமதிப்பத்திரம்

வாகனவரி அனுமதிப் பத்திரங்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் கோப்பாய் பிரதேச செயலகத்தில் வழங்கப்படுகின்றன.

பற்றுச் சீட்டுக்களைச் சமர்ப்பித்து வாகனவரி அனுமதிப்பத்திர அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## பன்னிரு திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5
அகில இலங்கைத் திருமுறைமன்றத்தினர் நடத்தி வரும் மாதாந்தப் பௌர்ணமிதின பன்னிரு திருமுறைப் பாராயணம், அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் என்பன எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

## ஓய்வூதிய வேலைகள் கணனி மயம்

கொழும்புத்துறை, ஏப். 5
கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் ஏப்ரல் 1998 தொடக்கம் ஓய்வூதிய உறுதிச் சீட்டுக்கள் கணனி மயப்படுத்தப்பட்டு அனுப்பப்படுகின்றன.

இதன் மூலம் ஓய்வூதியர்கள் தங்களது ஓய்வூதியத்தை உரிய திகதியில் பெற்றுக் கொள்ள வசதி ஏற்படும் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## முக்கிய அறிவித்தல்

சமத்தர் முறிவு நோவு வைத்தியநிலையம்
(ஒட்டகப்புலம்)

எமது வைத்திய நிலையம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவும், புலோலி 1 ஆம் கட்டையிலும் இயங்குகின்றது. ஏனைய இடங்களில் இயங்கும் முறிவு, நோவு வைத்திய நிலையத்துக்கும், நோவு எண்ணெய் விற்கும் வியாபார நிலையத்துக்கும் எமக்கும் எந்தவிதத் தொடர்பும்இல்லை. இதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு நாங்கள் பாத்திரவாளிகள் அல்லர். போலிவைத்தியர்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

(ஆயுர் வேத வைத்தியர்கள்)

செ. அருட்பிரகாசம்,
(நவரெட்ணம்)
Regd. NO. 3558,
NO.454, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

பெனடிற் சமத்தர்,
1 ஆம் கட்டை,
புலோலி,
Regd. NO. 1960

(சி-3329)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 16 — 05 — 1916



மறைவு: 04 — 03 — 1998

### பண்டிதர் கணபதி சிவலிங்கம்

யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு
(இளைப்பாறிய அதிபர்)

காசினி வியக்கும் கல்வி கண்ணென ஈய்ந்து எம்மை
மாசறு எச்சமாக மண்ணினில் வாழவைத்த
ஆசறு இல்ல அண்ணயா விளக்கே அவனிபோற்ற
தேசொடு வாழ்ந்த நேரிய நீர்மைய நீடுலகினிலே
பேசுநாள் மறவோம் பெட்புறு கேண்மை
கிளர்ந்தொளி கால
வாச மலரென மலரும் மாண்பே மாண்பின்
வரையே
காசினிலாக்கனியே கடவுளர் திருவே கண்ணெனும்
ஆத்ம
வீசு புகழ் விளக்கே ஒளிர்வாய் நலனே நாளும்
எம்முளம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

134 (276), பிரதான, வீதி,
யாழ்ப்பாணம்.

(54661)


## உங்கள் முழுக்குடும்பத்துக்கும் தேவையான அனைத்து ஜவுளித் தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்:

### சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

இல. 41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.



புதுவருடத்தை முன்னிட்டு ஞாயிறு விற்பனையுண்டு.

[சி/3327]





## கபிரியேல் வைத்தியசாலை சுன்னாகம்

### வைத்திய கலாநிதி ஜி. ஜோர்ஜ் (சமாதான நீதிவான்)

எனது அன்புள்ள வாடிக்கையாளருக்கு ஒரு நற்செய்தி!
எனது வைத்தியசாலை சுன்னாகத்தில் எனது சொந்த மேல்மாடிக்கட்டடத்தில் முன்னைய இடத்தில் மீண்டும் நாளை (06 – 04 – 1998) திங்கட்கிழமை முதல் இயங்கும்.
என்னால் பரீட்சிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.
வைத்தியசாலை தினமும் (ஞாயிறு தவிர) காலை 8 மணிமுதல் மாலை வரை திறந்திருக்கும்.
எண்ணெய் வகைகள், மருந்து வகைகள் யாவும் தாராளமாக உண்டு என்பதை அறியத்தருகின்றேன்.

(54602)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அழுத்த அடி தேவை

வடக்கு — கிழக்கில் கையெழுத்து இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

போரை உடனடியாக நிறுத்தி சமாதானச் சூழ்நிலையை உருவாக்க அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் முன்வர வேண்டும். போர் நிறுத்தத்தை உருவாக்குவதற்கான முயற்சியில் தமிழ் எம். பிக்கள் 27 பேரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

மேற்கண்ட இரண்டு கோரிக்கைகளை முன் வைத்தே கையெழுத்து இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு முழுவதிலும் வாழும் மக்களிடம் குறிப்பிட்ட மகஜரில் - மேற்கண்ட கோரிக்கைகள் இடம்பெறும் மகஜரில் — கையொப்பம் பெறப்பட உள்ளது.

இத்தகைய கையொப்ப மகஜர் பூரணமாக அமையும் பட்சத்தில் மக்களின் கருத்தே அதில் பிரதிபலிக்கப்படுவதாகக் கொள்ளலாம்.

தமிழ்மக்களைப் பொறுத்தளவில் அவர்களின் அவஸ்தைகள் நீங்கவேண்டும். அது செயலளவில் கைகூடுவதற்குப் போர் உடனடியாக நிறுத்தப்படுவது மிகவும் அவசியம். தமிழ் மக்கள் அனைவரினதும் ஒருமனதான விருப்பமும் அதுவேயாகும்.

தமிழர்களின் இந்த விருப்பம் முழுமையாக இது வரை பிரதிபலிக்கப்படவில்லை. மக்கள் அமைப்புகள், அரசியல் பிரமுகர்கள், புத்திஜீவிகள் சிலர் இந்த விருப்பத்தை இருந்திருந்தாற் போலச் சொல்வதோடு நின்றுவிடுகிறது.

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் நாமும் போர் நிறுத்தம் கேட்டோம். அரசு அதில் அக்கறை காட்டுவதாக இல்லையே; இனி என்ன செய்யலாம்; என்று 'பெயருக்குச்' சொல்வதோடு நின்று விடுகின்றார்கள்.

இதற்கு மேல் போரை நிறுத்துமாறு அரசாங்கத்துக்கு எவரும் அழுத்தம் கொடுத்ததாக இல்லை. போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் விருப்பம் கனதியான முறையில் பிரதி பலிக்கப்படவும் இல்லை.

தமிழ்மக்களின் நலனைக் கருதி போரை நிறுத்துவதற்குப் பாதகமான கருத்தை விடுதலைப் புலிகள் இதுவரை வெளிப்படுத்தியதில்லை. ஆனால் அரசாங்கம் போரை நிறுத்த முன்வரவிருக்கும் வரை— போரைத் தொடரும் வரை —அவர்கள் அதனை நிறுத்தமாட்டார்கள்.

போரின் ஊடாகவே சமாதானம் என்ற தனது அணுகுமுறை நடைமுறைச் சாத்தியமற்றது என்பதனை அரசு உணர்ந்து போரை நிறுத்தும் என்று எதிர்பார்க்கவும் முடியவில்லை.

அந்த மாயையிலிருந்து மயக்கத்திலிருந்து அரசை தட்டி எழுப்புவதற்கு அதற்கு அழுத்த அடி போடுவது அவசியம். அந்த அடியை தமிழர்கள் மட்டும் போட்டு அது விழித்துக் கொள்ளாது சிங்கள மக்களும் போரை நிறுத்துமாறு பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் மூலம் அழுத்தம்போட வேண்டும். இரண்டு பக்க இடி விழுந்தால் அரசு தனது அணுகுமுறையை மாற்றாமல் இருக்க முடியுமா?

# சைவ சித்தாந்த உலகில் மிகவும் பிரகாசித்த திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர்

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்

சைவசித்தாந்த சாஸ்திர உலகில் மிகவும் பிரகாசித்தவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் அவர்கள்.

பறங்கியர் இந்த நாட்டை அரசு செய்த பொழுது யாழ்ப்பாணத்திலிருந்த பறங்கித் தலைவனுக்கு ஒவ்வொரு வீட்டாரும் ஒரு நாளைக்கு ஒரு பசு வீதம் உணவின் பொருட்டு கொடுக்க வேண்டும் என்பது அப்பொழுதிருந்த கட்டளை. தெய்வமாக வணங்கும் பசுவை உணவின் பொருட்டுக் கொடுக்க விரும்பாதிருந்தார் திருநெல்வேலி ஞானப்பிரகாசர் அவர்கள். அவர் பசு கொடுக்க வேண்டிய முறை வந்ததும் கட்டிய மனைவியையும், பெற்றோரையும் விட்டுப் பிரிந்து இரவோடிரவாக வடக்கே போய்ச் சேர்ந்தார்.

திருநெல்வேலிக்கு மற்றொரு பெயர் சாலிவாடிபுரம். அதனால் சாலிவாடிபுரம் ஞானப்பிரகாசர் என்றும், சிதம்பரத்தில் தங்கியிருந்து தவஞ்செய்து அனுக்கிரகம் பெற்றதுடன் ஞானப்பிரகாசர் குளம், ஞானப்பிரகாசார் மடம் என்பனவற்றைத் தாபித்த காரணத்தினால் சிதம்பரம் ஞானப்பிரகாசர் என்றும், திருவண்ணாமலை ஆதீனத்தில் கஷாயம் பெற்ற காரணத்தினால் திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் என்றும் இவர் அழைக்கப்பட்டார்.

## இருவர் ஞானப்பிரகாசர்

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவா அவர்கள் திருநெல்வேலியிற் பிறந்தவர். சுவாமி ஞானப்பிரகாசர் என்பார் திருநெல்வேலியில் பிற்காலத்தில் வாழ்ந்தவர். இருவரது சரித்திரங்களையும் தனித்தனியே நன்கு அறியாத சிலர் இவ்விருவரும் ஒருவரே என்று தவறாக எண்ணுகிறார்கள்.

சைவரான ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் அவர்கள் நானூறு வருடங்களுக்கு முன் (1590 அளவில்) யாழ்ப்பாணம் திருநெல்வேலியில்



பிறந்தார். பறங்கியர்எம்மை ஆண்ட காலம். தந்தையார் பெயர் காராளபிள்ளை. பரம்பரையாகச் சைவ மரபினர். வடமொழியிலும் தமிழிலும் பலநூல்களை எழுதிப் பிரசித்தி பெற்றவர். வெள்ளி அம்பலவாணத் தம்பிரான் முதலான பெரியோர்களினால் மிகவும் பாராட்டப் பட்டவர். சைவசமய வளர்ச்சியின் பொருட்டுத் தமது உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்தவரான திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர்களது மரபில் வந்தவரே யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் என்பது ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத் தக்கது.

கத்தோலிக்க குருவானவரான சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1875 ஆவணி 30 அவர் பிறந்த தினமாகும். தந்தையார் பெயர் சுவாமி நாதன். பழுத்த சைவர். தாயார் புரட்டஸ்தாந்து மதத்தினர். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் வைத்திலிங்கம். கனகரத்தினம் என்று இவரைச் செல்லமாக அழைப்பதும் உண்டு. சிறிய தந்தையாருடன் படிப்புக்காரணமாகஅச்சுவேலியில் சிலகாலம் வாழ்ந்தார். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். 1 - 12 - 1901இல் கத்தோலிக்க சமய குருவானார். கத்தோலிக்க மத வளர்ச்சிக்கு உழைத்த இவர் திருநெல்வேலியிலும் (ஆடிய பாத வீதி) சிலகாலம் வாழ்ந்தார். 22 – 01 - 1947 இல் மறைந்தார்.

குறித்த சரித்திரங்களின் வாயிலாகவேனும் இருவர் ஞானப்பிரகாசரும் ஒருவர் அல்லர் என்பதை யாவரும் அறியக்கடவர்.

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரது சரித்திரத்தை மிகவும் சுருக்கமாகத் திருமயிலை ஸ்ரீமத்செ. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்.

ஞானப்பிரகாச முனிவர்

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஞானப்பிரகாச முனிவர் பற்றி எழுதிய கட்டுரை கோயில் (சிதம்பரம்) குடமுழுக்கு விழா மலரில் (1979) வெளிவந்தது.

ஈழமண்டல சதகம் என்கின்ற அரிய நூலினைச் செய்தவர் உரையாசிரியர் மட்டுவில் ம. க. வேற்பிள்ளைப் புலவர் அவர்கள். அந்நூலில் ஞானப்பிரகாச முனிவர் பற்றிய செய்யுள்கள் நான்கு இடம்பெற்றுள்ளன. மிகவும் அருமையான செய்யுள்கள் அவை.

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரின் சரித்திரம் விவரமாக வர வேண்டும் என்று விரும்பியவர்கள் பலர்.

இந்து கலாசார அமைச்சின் செயலாளராக ஒரு போது இருந்த துன்னையம்பதி திரு. வே. ந. சிவராசா அவர்கள் இவ்விடயத்தில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்க ஒருவர். தாம் பதவி வகித்த அமைச்சின் மூலமாக பசுவதையை எதிர்க்கும் முகமாக ''கோமாதா குல மாதா'' என்ற தலைப்பில் பிரசுரங்களை வெளியீடு செய்தும் பசுக்களின் ஊர் வலங்களை நடத்தியும் நாட்டு மக்களை விழிப்படையச் செய்தார். ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் அவர்களின் குருபூசை நடைபெற வழிகாட்டியாகவும் இருந்தார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# அமைதித்துளிகள் எமது மண்ணில் பரவ அதற்கான கருவிகளாகுங்கள்

அருட்சகோதரர் பொன்சியஸ்

''ஓசன்னா, ஓசன்னா; ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி! இஸ்ராயேலின் அரசே வாழி!'' என்று ஆர்ப்பரித்து அகமகிழ்ந்து மக்கள்கையில் குருத்தோலைகளோடு கிறிஸ்துவை எதிர் கொண்ட பவனி இன்றும் ஆலய முன்றலில் நினைவு கூரப்படுகின்றது.

மகிழ்ச்சி பொங்கும் வரவேற்பு, குருத்தோலை ஏந்திய பெருங்கூட்டம் நடுவே கிறிஸ்து பவனி வருகின்றார். ''சீயோன் மக்களே அஞ்ச வேண்டாம்; இதோ உன் அரசர். இதோ கழுதைக் குட்டிமேல் ஏறி வருகிறார்'' என்றசெய்தியை அன்றும் சீடர்கள் உணரவில்லை. அதன் மகிமையின் அடையாளமாக குருத்தோலையினை ஏந்துகின்றோம்.

ஒலிவம் இலை குருத்தோலைகளால் வேறுபட்டாலும் எம் மனங்களால் ஒன்றுபட்ட மகிழ்வில் நாம் இறைமக்களாக இணைகின்றோம் என்ற உணர்வில் மகிழ்வினைக்கண்டு பரிசேயர் சிலர், ''இதோ உலகமே அவர் பின் ஓடுகிறது'' என்று முணுமுணுத்தார்கள்இன்றும் அந்த முணுமுணுப்புக்களை கண்டு மிரண்டு விடாது பவனியில் இணைந்த உங்கள் நம்பிக்கைக்கு மேலும் அர்த்தமூட்ட விழைகின்றது இக்காலம்.

இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பனவற்றைச் சிறப்பாகத் தியானிக்கும் காலம் தபக் காலமாகும். இக்காலத்தின் இறுதிக் கட்டத்திற்குள் காலடி எடுத்து வைக்கின்றோம். புனித வாரத்தின் முதல் நாளாக ''பாடுகளின் ஞாயிறு'' அமைகின்றது.

சீடர்களின் வெற்றி ஆரவாரத்தோடு இயேசு ஓர் அரசனைப்போல் கழுதை மீதேறி ஜெருசலேமிற்குள் நுழைகின்றார். போர்க் காலங்களில் குருதியை பயன்படுத்திய அக்கால அரசர்கள், அமைதியான நாள்களில் கழுதைமீதேறி பவனி வந்ததாக வரலாறு கூறுகின்றது. ஆகவே கழுதை அமைதியின் சின்னம். சமாதானத்தின் அறிகுறி. தனக்கு நிகழவிருக்கும்சிலுவை மரணத்தை அறிந்து இருந்தும் இயேசு சமாதானத்தின் அரசராக ஜெருசலேம் நோக்கி பயணஞ் செய்கிறார்.

''சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர் ஏனெனில், அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்'' என மலைப் பொழிவு பிரசங்கத்தில் இயேசு கூறியிருக்கிறார். சமாதானம் செய்ய புறப்படும் முன் எமது உள்ளங்களை சமாதானத்தின் இருப்பிடங்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். எமது உள்ளத்தில் உள்ள தீய சிந்தனைகளும், நாட்டங்களும் நீங்கப்படும் போது தான் அமைதித் துளிகள் எம் உள்ளங்களை நனைக்க முடியும். நாமும் சமாதானத்தின் தூதுவர்களாக மாற முடியும்.

சமாதானத்தின் சின்னமாகச் சென்ற இயேசுவுக்கு கிடைத்த பரிசு சிலுவை மரணம். ஆனால் மரணம் அவரை மேற்கொள்ளவில்லை; அவரது மரணம் பலரது எண்ணங்களுக்கு ஊற்றாக அமைந்தது. அதே போல் சமாதானத்தின் கருவிகளாகி தங்கள் உயிரைக் கொடுத்தவர்கள் ஒருபோதும் புதைக்கப்படவில்லை; மாறாக விதைக்கப்பட்டிருக்கின்றார்கள் அவர்களது தியாகம் பலரது சிந்தனைகளை வருடிச் சென்றிருக்கின்றது. அவர்களதுஇதய நாதம் இன்று பலரது இதயங்களில் சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கின்றது.

சமாதானத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் சமாதானத்தின் வேந்தனான இயேசுவை எமது இதய வேந்தனாக ஏற்றுக் கொள்ளுவோம். அவரது சமாதானத்தின் அடிச்சுவட்டில் நாமும் நடக்க முயற்சிப்போம். எமது இதயங்கள் சமாதானத்தின்இருப்பிடமாகட்டும். எமது செயல்களில் சமாதானத்தின் கதிர்கள் ஒளிரட்டும். நாம் சமாதானத்தின் கருவிகளாவோம். அப்போது தான் சமாதானத்தின் அரசன் இயேசுவுக்கு ஓசன்னா பாடமுடியும். ★

## நாளை

பங்குனி 23

திங்கட்கிழமை

திதி: தசமி

முன்இரவு 7.45 வரை.

நட்சத்திரம்: பூசம்

முற்பகல் 8.14 வரை.

யோகர் சுவாமிகள் குருபூசை

சுபநேரம்: 12.08-1.38

ராகு காலம்: 7.38- 9.08

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

## யாழ். வண்ணை. வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

### ஊழ்வினை போக்கிடுவாய்!

வந்தனை செய்தே வரங்கேட்டு நிற்கின்றோம்
வண்ணை வைத்தீஸ்வரா வரமருள்வாய்
சிந்தனை என்றும் உனக்கே அளித்திட்டோம்
சீரிய நல்வாழ் வருள்வாயே!
உந்தனைத் துதித்தே உன்னாமம் உச்சரித்தோம்
ஊழ்வினை போக்கியருள்வாய்!
கந்தனைப் பயந்த காரிகை தையல் நாயகியோடு
காட்சி தருவாய் எங்கள் ஈசா!

இராசையா ஸ்ரீதரன்

(இன்று குருவாரம் பதினான்காம் திருவிழா)

## உதயவாக்கு

இறைவனை நாம் முழுமையாகச் சரணடையும் போது அவனது சக்தி நம்மைப் பாதுகாத்து வழி நடத்திச் செல்கிறது. சரணாகதி ஆன்மீக வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

- சுவாமி யதீஸ்வரானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப் பாளராகவும் யாழ். வலயம் 1 இன் கல்விப் பணிப் பாளராகவும் கடமையாற்றிச் சிவபதமெய்திய

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்ப துடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தி னருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை அஞ்சலியாகச் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/சுன்னாகம்
மயிலணி சைவ மகா வித்தியாலயம்,

(54573)

## கண்ணீர் அஞ்சலி

அஞ்சா நெஞ்சுடன் செயலாற்றிய செம்மல்

**அமரர் சு. இரத்தினராசா**

(கல்விப் பணிப்பாளர் வலயம் –1)

அவர்களின் பிரிவு குறித்து வருந்துவதுடன் குடும் பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவித் துக் கொள்கின்றோம்.

அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள்,
யா/ சங்குவேலி அ. த. க. பாடசாலை,

(சி/3302)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சு. இரத்தினராசா**

(கல்விப்பணிப்பாளர் வலயம் 1)

ஆசிரிய வாண்மைத் தொழிலிலீடுபட்டோர்க்கும்
அதனோடிணைந்த துறையினர்க்கும்
அருஞ்சேவையாற்றிய அமரர் ஆத்மா
சாந்தியடைப் பிரார்த்திக்கும்

இ. வல்லிபுரம்.
மானிப்பாய். (ஓய்வுபெற்ற அதிபர்)

(சி/ 3319)

## கண்ணீர் அஞ்சலி

கல்விப் பணியில் கருத்தூன்றிய சேவையால்
கற்றோரையும் மற்றோரையும் இனிதாய்க்கவர்ந்து
கல்விப் பணியாற்றி அணைந்த பேரொளி

அமரர்

**சு. இரத்தினராசா**

(கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம் 1)

அவர்களின் மறைவு குறித்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அமரரது ஆத்மசாந் திக்கு பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தின ருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்
கோட்டக்கல்வி அலுவலர், உத்தியோகத்தர்கள்,
அதிபர்கள், முதன்மை ஆசிரியர்கள்,
ஆசிரியர்கள், ஏனைய ஊழியர்கள்.

கோட்டக் கல்வி அலுவலகம்,
சங்கானை.

(54584)

## இதய அஞ்சலி

உடுவில் கல்விக்கோட்டத்தின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும்,
யாழ். கல்வி வலயம் 1இன் கல்விப்பணிப்பாளருமாகிய

**திரு. சு. இரத்தினராசா**

அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்தோம். அமரருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், குடும்பத்தவர் களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
யா / கந்தரோடை தமிழ்க்
கந்தையா வித்தியாசாலை.

(சி/3301)

## கண்ணீர் அஞ்சலி

**திரு சு. இரத்தினராசா**

(யாழ். வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர்)

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த கவலை யடைகிறோம். அன்னாரின் பிரிவால் வேதனையுறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள், பழைய மாணவர் சங்கப்
பெற்றோர், ஆசிரியர் சங்கம்,
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

(44582)

## கூட்டுறவு ஊழியருக்கு முற்பணம்

அரியாலை ஏப். 5

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புது வருடத்தை முன்னிட்டு பண்டிகைக் கால முற்பணமாக ஆயிரத்தி ஐந்நூறு ரூபாவை ஊழியர்களுக்கு வழங்கி வருகின்றது.

இந்த முற்பணம் கூட்டுறவு ஊழியர்களுக்கான புதிய சம்பள உயர்வுச் சுற்றறிக்கையின் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றது.

(ஐ-17)

## சிறுவர் அபிவிருத்தி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 5

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் ''சிறுவர்களுக்கான அபிவிருத்தி'' பற்றிய கலந்துரையாடல் இன்று ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்தில் சி. சிவமகாராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ)

## தமிழ் மொழி தினப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 5

சாவகச்சேரி கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித் தினப் போட்டிகள் எதிர் வரும் 8 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணி முதல் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் எழுத்துப் போட்டிகளும், 15 ஆம் திகதி புதன்கிழமை பேச்சு, வாசிப்பு, நாடகப்போட்டிகளும் நடைபெறவுள்ளதாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் கணேசன் அறிவித்துள்ளார்.

(ஐ-7)

## மெய்வல்லுநர்போட்டி

யாழ்ப்பாணம் ஏப். 5

யாழ். கனகரத்தினம்மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறு தினம் செவ்வாய் பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்க பயிற்றுனர் வி. கே. சண்முகலிங்கம் முதன்மை விருந்தினராகவும், வலயம் ஒன்றின் உடற்கல்வி முதன்மை ஆசிரியர் க. குமாரசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

## கலந்துரையாடல்

கூட்டுறவு ஊழியர்களுக்கான புதிய நடைமுறை விதிக் கோவையை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது தொடர்பாக விளக்கும் கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கான சம்பளம், மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவது, ஊழியர்களின் நடைமுறை ஒழுங்கு விதிகள் ஊழியர்களின் விடுமுறை போன்ற விதிகள் புதிய கோவையில் தெரிவிக்கப் பட்டுள்ளன.

இந்தப் புதிய கோவையை எவ்வாறு அமுல்படுத்துவது என்பதை ஊழியர்களுக்கு விளக்கவே இக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

## இன்று

[illegible]கட்டுடை அரசடி விநாயர் ஆலய மஹோற்சவ ஐந்தாம் [illegible] நாளான இன்று ஞாயிறு பகல் அன்னதானமும், பிற்பகல் 4 மணிக்குச் [illegible] சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

(ஐ-7)

## இரத்தினத்துக்கு இதய அஞ்சலி

எம்மண்ணில் கல்வியினை வளமாக்கி
இறையடி சேர்ந்த

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நாம் ஆற்றொணாத் துயரடைகின்றோம். அவரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

கோட்டக்கல்வி அலுவலர்கள்,
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கரவெட்டி, மருதங்கேணிக் கோட்டங்கள்.

(சி/3305)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கல்வி வலயம் 01 இன் கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவு குறித்து அன்னாரது குடும்பத் தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித் துக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்யாக்குகின்றோம்.

கோட்டக் கல்வி அலுவலர்,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
நெடுந்தீவுக் கல்விக் கோட்டம்.

(54583)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணக் கல்வி வலயம் 01 இன் கல்விப் பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம்
ஊர்காவற்றுறை.

(54596)

## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்கள் அமரத்துவம் எய்தினார் என்ற செய்தியைக் கேள்வியுற்று அதிர்ந்தோம்.

அன்பு, அருள் அறனுக்கும் திருவுருவாக விளங்கிய அமரருக்கு எமது கல்லூரியுடன் இணைந்து அதன் வளர்ச்சிக்கு உரமூட்டிய உத்தமருக்கு நெஞ்சு நெக்குருக கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாககுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/இராமநாதன் கல்லூரி
மருதனார்மடம்.

(சி/3303)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கல்வி வலயம் 1 இன் பணிப்பாளராகப்
பதவி ஏற்று அதிபர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்களுக்கு அரு பெரும்
சேவையாற்றிக் கொண்டிருந்த

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கும் கல்விப் பணியிலுள்ளோருக்கும் எமது கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகின் றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
அபிவிருத்திச் சங்கத்தினர்.
யா / திருநெல்வேலி இ. த. க. பாடசாலை

(54577)

## இதய அஞ்சலிகள்

**அமரர் சு. இரத்தினராசா**

(கல்விப்பணிப்பாளர் — வலயம் 1)

'உள்ளத்தால் பொய்யாதொழுகின்
—உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'

தனது தன்னலமற்ற சேவையினால் சகல நெஞ்சங்களிலும் நிறைந்திருக்கும் சு. இரத்தினராசா அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

(54620)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் தரப்பு...

(முதலாம் பக்கத்தொடர்)
களை ஏற்படுத்த நீங்கள் உதவ வேண்டும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்கு முன்வந்து நிரந்தர தீர்வு ஒன்றைக் காண நீங்கள் முன்வர வேண்டும்'' என்று ஆயர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதில் அளித்த விடுதலைப் புலி பிரமுகர்கள் தெரிவித்த விவரம் வருமாறு:

★ மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மூலம் தீர்வு காண இன்னும் எமக்கு விருப்பம் உள்ளது. அதைச் செய்ய வேண்டியது நாம் அல்ல, அரசாங்கமே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தக் கோரிக்கையை அரசாங்கம் இன்னும் நிராகரித்து வருகின்றது.

★ அரசாங்கம் இரு வேறு அணுகு முறைகளை எமக்கெதிராக மேற்கொண்டுள்ளது. ஒன்று இராணுவ முறையானது. மறறது அதிகாரப் பரவலாக்கல யோசனை தொடர்பானது.

இராணுவ முறையான நடவடிக்கையின் ஒரு பகுதியாக ''வெற்றி உறுதி'' நடவடிக்கை ஆரம்பமானது. ஒரு வருடத்தை எட்டக் கூடிய— உலகில் மிக நீண்ட — நடவடிக்கை ஒன்றை எமக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கையிலும் அரசாங்கம் எம்மை வெற்றி கொள்ள முடியாத நிலையில் உள்ளது. தொடர்ந்தும் எம்மிடம் உள்ள நவீன ஆயுதங்களுடன் எமது நடவடிக்கையைத் தொடர்வோம்.

சந்திரிகா அரசு எம் மீது அதிகாரப் பரவலாக்கல் யோசனை ஒன்றைத் திணித்தது. அந்த யோசனையும் சிங்கள தேசக் கட்சிகளான ஐ. தே. க. — பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கட்சிகளிடையே ஒருமைப்பாடு காண முடியாத நிலையில் தொடர்கின்றது.

### நிரந்தர தீர்வுக்கு ஒரே வழி

இராணுவ, அரசியல் நடவடிக்கைகளில் எம்மிடம் தோல்வி கண்டுள்ள ஸ்ரீலங்கா அரசாங்கம் இனி நிரந்தர தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஒரே வழிதான் உண்டு.

இராணுவரீதியில் ஸ்ரீலங்கா இராணுவமும், விடுதலைப் புலிகளும் சமநிலை ஏற்படும் போதுதான் இனப் பிரச்சினைக்கான தீர்வு ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்பதை நாம் தெரிவிக்க விரும்புகின்றோம்.

அரசியல், இராணுவரீதியில் தோல்விகளைச் சந்தித்து வரும் அரசுடன் இனி நாம் பேச வேண்டுமானால் இரு நாட்டு படைகளிடையே சமநிலை ஏற்பட வேண்டும் என்பதே நமது கருத்து.

### இந்தியத் தேர்தல் முடிவு

இன்று இந்தியத் தேர்தலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து நாம் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. அந்தத் தேர்தலால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நாம் மிக அவதானமாக—ஆரோக்கியமான — கண்ணோட்டத்துடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.

உண்மையில் தமிழ்மக்களுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று ஏற்படக் கூடிய வாய்ப்பு இந்தியாவின் புதிய அரசு மூலம் ஏற்பட்டால் அதை நாம் வரவேற்போம். அந்த நிலைமை குறித்து நாம் நுணுக்கமாகஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்.

உண்மையில் இந்திய அரசு (12ஆம் பக்கம் பார்க்க)

## 37-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 16 — 11 — 1938

மறைவு: 28 — 02 — 1998

### அமரர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

(இலங்கை துறைமுக அதிகார சபை)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வாழ்விடமாக கொண்டவருமான அமரர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

குடும்பத்தினர்,
சகோதரி: பரமேஸ்வரி நடராசா,
சகோதரர்: சண்முகநாதன்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

(54624)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### உயர்திரு. ஐயாக்குட்டி மாணிக்கவாசகர்

(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்: 14 - 12 - 1919

மறைவு: 10 - 10 - 1997

பாசமிகு குடும்பத் தலைவனே
எம் அன்புத் தெய்வமே
அன்பின் குலவிளக்காய் பாசத்தின்
உறைவிடமாய் அறவழி நின்று
பண்புடனும் பாசத்துடனும்
வளர்த்து எம்மையெல்லாம்
சமூகத்தில் உயர்நிலையில் வாழ
வைத்து விட்டுச் சென்ற
எம் அன்புத் தெய்வமே உங்கள்
ஆன்மா சாந்தி அடைய
வெள்ளை மாவடியானை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

ஐயாகடையடி,
மீசாலை.

(சி/3346)

## சைவ சித்தாந்த....

(ஒன்பதாம் பக்கத்தொடர்)
திருநெல்வேலியில் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரின் ஞாபகார்த்தச் சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. குறித்த சபை ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சரித்திரத்தை வெளியிட விரும்பியது. ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சரித்திரத்துடன் அவருடன் தொடர்புபட்ட பல்வேறு விஷயங்களையும் தொகுத்து எழுதி உதவினார் பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் அவர்கள். சிறந்த சிந்தனையாளரான பல்கலைப்புலவர் எழுதிய உதவிய ஞானப்பிரகாச முனிவரின் சரித்திரம் முனிவரது குருபூசைத் தினமான இன்று (பங்குனி - பூசம்) வெளிவருவது மிகவும் பொருத்தம் உடையதே. திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவா பற்றிய இந்நூல் அவரைப் பற்றி அறிய விரும்புபவர்களுக்கு [illegible] ாக அமையும் என்பதில் ஐயம் இல்லை!

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் இரத்தினராசா

( கல்விப் பணிப்பாளர், வலயம் — 1 )

சுப்பிரமணியம் இரத்தினராசா அவர்கள் 30 — 03 — 1998 திங்கட்கிழமை அன்று சென்னையில் காலமானார்.

இவர் யோகேஸ்வரியின் (ஆசிரியை, உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை) அன்புக் கணவரும், காவேரி (A. T. I. மாணவி), மயூரன் (யாழ். இந்துக் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மண்டைதீவு, வேலணை காலஞ்சென்ற சுப்பிரமணியம் — முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கொக்குவில் மாணிக்கம் — பாக்கியம் தம்பதிகளின் ஏக மருமகனும், பழனி வேற்பிள்ளை (முன்னாள் கணக்காளர், R. V. D. B. அம்பாறை, தற்போது பகுதி நேர ஆங்கில ஆசிரியர், முத்துத்தம்பி வித்தியாசாலை), திருமதி வ. அன்னலக்சுமி (ஆசிரியை, யாழ். சன்மார்க்க வித்தியாலயம்), செல்வராசா (நிர்வாக அதிகாரி, நகர சபை, வவுனியா), கனகநாயகம் (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை), திசைநாயகம்பிள்ளை (ஆசிரிய ஆலோசகர், சாவகச்சேரி கல்விக் கோட்டம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கைலாயபிள்ளை (முன்னாள்முகாமையாளர், இலங்கைவங்கி), சுப்பிரமணியம் (பிரபலவர்த்தகர், மாணிக்கம் அன் சன்ஸ், கொழும்பு), சிவபாததுரை (வர்த்தகர், கொழும்பு), இராஜலிங்கம் (வர்த்தகர், கொழும்பு), இரத்தினலிங்கம் (பொறியியலாளர், கனடா), சிவச்சந்திரன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தினி (ஆசிரியை, வண்ணை நாவலர் வித்தியாலயம்), காலஞ்சென்ற வல்லிபுரம் (S. L. E. A. S. II விரிவுரையாளர்), மனோரஞ்சிதம் (ஆசிரியை, சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம், வவுனியா), பானுமதி (ஆசிரியை, செங்குந்தா வித்தியாலயம்), மீரா (செயற்திட்ட உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பளை) ஆகியோரின் மைத்துனரும் சரோஜினி, மாலதி, கமலாதேவி, வரதாமணி, வாணி, தயாளினி ஆகியோரின் முறைசார் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05 — 04 — 1998 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை ''சாட்டி'' இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி யோ. இரத்தினராசா
(மனைவி)

''மாணிக்கம்''
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.

(54676)

## சின்னையா சிவராமலிங்கம் (சிவப்பிரகாசம்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் ஈஸ்வரன் நகை மாளிகை உரிமையாளருமான சின்னையா சிவராமலிங்கம் 01–04–98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாளன் (பிரான்ஸ்), குணாளன் (சுவிஸ்), குமுதினி (கனடா), ஜெயலிங்கம் (பிரான்ஸ்), சேதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதா (பிரான்ஸ்), சங்கரி (சுவிஸ்), அரியநாதன் (கனடா) சிராந்தி (பிரான்ஸ்), சியாமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌதமன், துர்க்கா, கௌசல்யன், கௌசிகன், றோகினி, சுஜீவன், லக்ஷ்மன், ஜெசாந்தன், சௌமியா, ஜெசன், ஜெனனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (04–04–98) பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (5–4–98 ஞாயிறு) மாலை 5 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நாகேஸ்வரி
[மனைவி]

30/11A, Station Road,
Kirilapone.

(சி/3339)

## திருமதி சண்முகநாதன் தில்லையம்மா

சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி சண்முகநாதன் தில்லையம்மா 04–04–98 இல் இறையடி எய்தினார்.

இவர் சண்முகநாதனின் (சைவம்) அன்பு மனைவியும், இராமகிருஷ்ணமூர்த்தி, தில்லைநாதன், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், உமா, ஞானாம்பிகை, றிக்கி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரகுபதி, கலாபதி, பசுபதி, கோமதி, மாலதி, நாகதர்சினி, செல்வி ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05–04–98 இல் பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
இ. சண்முகநாதன்
(கணவர்)

தொல்புரம்,
சுழிபுரம்.

(64675)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Seminar on mine awareness for AGAS / DDPS and DISTRICT SECRETARIET STAFF**

**07 – 04 – 98**

The above seminar is postponed
Regret inconvenience caused

Dr. N. SIVARAJAH
Head, Department of community Medicine.
FACULTY OF MEDICINE, JAFFNA.

(54616)



எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

★ ராமன்தேடிய சீதை
★ தீபம்
★ என் அண்ணன்
★ ஜஸ்டிஸ் கோபிநாத்
★ பராசக்தி
★ மன்னாதி மன்னன்
★ பல்லாண்டு வாழ்க
★ வீர அபிமன்யு
★ ராஜ ராஜ சோழன்
★ மாட்டுக்காரவேலன்
★ ஊருக்கு உழைப்பவன்
★ பச்சைவிளக்கு
★ ராஜா தேசிங்
★ மீனவ நண்பன்
★ எங்கள் தங்கராஜா
★ நேற்று இன்று நாளை
★ ரிஷிமூலம்
★ திரிசூலம்
★ கவரிமான்
★ ஆண்டவன் கட்டளை
★ தில்லானா மோகனாம்பாள்
★ நாடோடி
★ ஆனந்தஜோதி
★ அன்னமிட்ட கை
★ ரிக்ஷாக்காரன்
★ பல்லாண்டு வாழ்க
★ உரிமைக்குரல்
★ தேடிவந்தமாப்பிள்ளை
★ ராஜா
★ பந்தம்
★ தியாகம்
★ பாசம்
★ சிரித்து வாழவேண்டும்
★ என் கடமை

ஓடியோ CD வெளியீடு!

★ காதல் சின்னம்
★ கவலைப்படாதே சகோதரா

**சுப்பஸோ வீடியோ**

யாழ்ப்பாணம்.

(சி/3354)


# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## செல்லையா சீவரத்தினம்

(கிளி)

(முன்னாள் ஊழியர் இ. போ. ச.)

மலர்வு: 24 - 06 - 1942 உதிர்வு: 17 - 03 - 1997

திதி: 05 – 04 – 1998 ஞாயிறு

மின்னல் போல் வந்த பசு மோதியதே மோட்டார் சைக்கிளுடன் வீழ்ந்து விட்ட நேரம் முதல் நீங்கள் விழியே திறக்கவில்லை. விழித்திருந்து காத்திருந்தோம். மீட்டெடுக்க முடியவில்லை. கன்னல் மொழி கேட்காமல் கலங்குகின்றோம் நாங்கள் இங்கே கண்மணி போல் காத்தவரே கடைசிவார்த்தை பேசவில்லை.

அன்புக் கினியவரே ஆருயிரே எங்கள் அப்பாவே
மண்ணில் இருக்கும் வரை மறப்போமே உம் நினைவை
ஆண்டு பல சென்றாலும் ஆறாதே எம் துயரம்
மீண்டொருக்கால் வாரீரோ? மீள எம்மைப் பாரீரோ?

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள், மைத்துனர்மார், மைத்துனிமார், உறவினர்.

உரும்பராய் வடக்கு. (சி/3351)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 5-04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மெய்வன்மைப் போட்டிகள்

# சான்றிதழ்கள், பதக்கம் வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாணத்தில் புதுவருடத்தை ஒட்டி நடைபெறும் விளையாட்டுப்போட்டிகளின் தொடரில், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்திய மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மெய்வல்லுநர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கும் நிகழ்வு நாளை காலை 10.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என்றும் —

வெற்றியீட்டிய மெய்வல்லுநர்களை நாளை தமது பரிசில்களைப் பெற்றுச் செல்லுமாறும் —

யாழ். மாவட்ட அமைச்சூர் மெய்வன்மைச் சங்கம் அறிவித்துள்ளது.

பெண்களுக்கான ஏழுவகைப்போட்டி மற்றும் ஆண்களுக்கான பத்துவகைப் போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டிய முதல் ஐந்து மெய்வல்லுநர்களும் —

அஞ்சலோட்ட நிகழ்ச்சிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளின் வீரர்களும் —

சைக்கிளோட்டம், வீதியோட்டம் ஆகியவற்றில் முதல் பத்து இடங்களைப் பெற்ற வீரர்களும் —

சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் பெற வரவழைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் கழக மட்டத்தில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகியவற்றில் முதல் இரு இடங்களைப் பெற்ற அணிகளின் தலைவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மாலை 4.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மெய்வல்லுநர்களுக்கான ஏழுவகைப் போட்டி, பத்துவகைப் போட்டி மற்றும் சைக்கிளோட்டம், வீதியோட்டம் ஆகியவற்றில் முதலிடங்களைப் பெற்றோரும் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகரில் நிலைகொண்டுள்ள 512 ஆவது படையணியின் அனுசரணையுடன் இந்த விளையாட்டுக்கள் நடைபெற்று வருவது தெரிந்ததே. (உ)

## திருமலை..

(முதலாம் பக்கத் தொடர்)

களை ஏற்றும் பணி நடைபெற்று வந்தது. தற்சமயம் அகதி முகாம்களில் அதிகளவானோர் தங்கியிருப்பதால் நான்கு தடவைகள் கப்பல் சேவையை நடத்த வேண்டும் என மன்னார் அரச அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார். எனினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து இதுவரை எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ–164-9)

## மூன்றாந்..

(11 ஆம் பக்கத் தொடர்)

மூலம் எமது நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமானால் அதை முதலில் வரவேற்பவர்கள் நாம் தான். அதற்காக அவர்களுடன் எமது தொடர்புகளையும் வலுப்பெறச் செய்வோம்.

இன்று வன்னியில் நடக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். ஆயர் என்ற முறையில் தாங்கள் ஆற்றும் பணிகளுக்கு நாம் நன்றி கூறும் அதே நேரம், கஷ்டமுறும் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர தங்களால் இயன்ற உதவிகளை வழங்க வேண்டும் [illegible] இப்படி [illegible] கள் பிரமுகர்கள் ஆயரிடம் தெரிவித்தனர். (இ–3)

## தொலைபேசி..

(முதலாம் பக்கத் தொடர்)

வித்தார்.

எனினும் அனைத்து முயற்சிகளையும் எடுத்து திங்கட்கிழமை முதல் முழு அளவில் சீர்செய்ய முயற்சிகளை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

அதே சமயம் நேற்றுச் சில பகுதிகளில் உள்ள தொலைபேசிகள் செயற்பட ஆரம்பித்த போதிலும் முழுமையான சேவையைப் பெற முடியாமல் இருந்தது. (இ-9)



வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசாவின் பூதவுடல் அவரது இல்லத்தில் நேற்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த போது எடுக்கப்பட்ட படம். (இ–9)


# பயிற்சிப் பத்திரிகையாளர்

( உதவி ஆசிரியர் / செய்தியாளர் )

பத்திரிகைத்துறையில் உங்களுக்கு ஆர்வம் உண்டா? பத்திரிகையாளராகவே தொடர்ந்து பணிபுரியும் விருப்பம் உள்ளவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்.

நவீன அச்சுக்கலை உட்பட பத்திரிகையாளர் பயிற்சி பெறுவதற்குத் தம்மிடம் ஆற்றல் உண்டு எனக் கருதுபவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆகக் குறைந்த கல்வித் தகைமை: ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி. கணனியியல் அறிவு, ஆங்கில அறிவு என்பன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும். வயதெல்லை 20 — 30 வரை.

ஆறு மாத காலப் பயிற்சிக் காலத்தின் போது அலவன்ஸ் வழங்கப்படும். தகுதியின் பேரில் நிரந்தர நியமனம் பெறுவோருக்கு அரசாங்க சம்பளச் சபை சம்பளத்திட்டத்தின் அடிப்படையில் ஊதியம் தீர்மானிக்கப்படும்.

பயிற்சி முடிந்த பின்னர் ஆகக் குறைந்தது மூன்று வருட ஒப்பந்தத்தில் பணியாற்ற விரும்புவோர் மட்டும் எழுத்து — நேர்முகப் பரீட்சைக்குத் தயாராக இன்று காலை 9-00 மணிக்கு நேரில் வரவும்.

பிரதம ஆசிரியர்,
உதயன் – சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



மீண்டும் யாழ். நகரில்
வீடியோ CD திரைப்படப் பிரதிகளுக்கு

**வீடியோ எக்கணமி**

காலாகாலமாக வாடிக்கையாளர்களின்
நன்மதிப்பைப் பெற்ற

வீடியோ எக்கணமி
இல. 908 கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார்கோயிலடி
( சாந்தி அச்சகம் முன்பாக )

மீண்டும் **06 — 04 — 1998** திங்கட்கிழமை மதியம் 12.00 மணி தொடக்கம் 1.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில் எமது ஸ்தாபனத்தை ஆரம்பிக்கின்றோம் என்பதனை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நிர்வாக இயக்குநர்
ஆறுமுகம் ரமேஷ்

( 54653 )


# யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வர்த்தகர்களுக்கான அறிவித்தல்

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு 05-04-98 தொடக்கம் 13-04-98 வரை உள்ள ஞாயிற்றுக்கிழமை அரசாங்க வர்த்தக வங்கி விடுமுறைகளில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்ய வர்த்தகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்:

(சி/3353)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org